**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | CC. No.32/2013 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | |
|---|---|
| Prosecution Witness | அ.சா.2 |
| Name : | **பெல்லா சாவித்ரி** |
| Father's/Husband Name: | **ஜோசப் முத்துராஜ்** |
| Village : | **பாடாலூர்** |
| Taluk | **ஆலத்தூர்** |
| Age : | 55/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **11/08/2021**

**முதல் விசாரணை :**

நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. இந்த வழக்கின் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கின் மனுதாரர் எனது தாயார். இந்த வழக்கின் எதிரி யேசுவடியான் என்பவர் எனது கணவருக்கு பழக்கமானவர் என்பதால் எங்களது வீட்டிற்கு அடிக்கடி வருவார். அவர் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார். எனக்கும், எனது அம்மாவிற்கும் அருகருகே நிலம் அமைந்திருந்தது. மொத்தம் எத்தனை ஏக்கர் என எனக்கு தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். எனது கையெழுத்தையும், எனது கணவரின் கையெழுத்தையும் பெற்று நிலத்தை விற்றுவிட்டார். நானும் எனது தாயாரும் சேர்ந்து மொத்தம் 7 ஏக்கர் நிலத்தை விற்றோம். ஆனால் முதல் எதிரி 10

ஏக்கரை விற்றதாக ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார். இரண்டு ஆண்டுகள் கழித்து எங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்தது அதன் பின்பு தான் எனது கணவர் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணங்களை சரிபார்த்தார். ஆனால் அதன் விபரத்தை எனது கணவர் என்னிடம் கூறவில்லை. அதன் பின்பு நாங்கள் காவல் துறையில் இரண்டு முறை புகார் கொடுத்தோம். அந்த புகாரின் அடிப்படையில் எங்களை விசாரித்தனர். எனது கையொப்பத்தை பரிசீலிப்பதற்காக காவல் துறையினர் மாதிரி கையொப்பங்கள் பெற்றனர். அந்த கையொப்பங்கள் **அ.த.சா.5** இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** : எதிரி தரப்பில் இல்லை.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

UNPUBLR

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | CC. No.32/2013 |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Prosecution Witness | | அ.சா.1 |
| Name | : | **ஜான்சி** |
| Father's/Husband Name: | | **ஜான் டெர்க்மன்ஸ்** |
| Village | : | **பாடாலூர்** |
| Taluk | | **ஆலத்தூர்** |
| Age | : | 75/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>11/08/2021</u>**

**முதல் விசாரணை :**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2008 ஆம் தேதி எனக்கும் எனது மகளுக்கும் சொந்தமான நிலம் பாடாலூர் மெயின் ரோட்டில் இருந்தது. யேசுவடியான் என்பவர் பிற நபர்களுக்கு நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வந்ததால் எங்களுக்கு அறிமுகம் ஏற்பட்டது. அப்போது நாங்களும் இடத்தை விற்க வேண்டும் என கூறினோம். அவரும் சரி என கூறினார். அதனால் நாங்கள் அவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தோம். அதில் எங்களுக்குரிய 10 ஏக்கரில் 7 ஏக்கரை கொடுப்பதாக கூறினோம். மீதி இடத்தை நாங்கள் எங்கள் பாதைக்காக வைத்துக் கொண்டோம். சரி என ஒப்புக் கொண்டு தான் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து 7 ஏக்கருக்கு நாங்கள் பொது அதிகார பத்திரம்

ஏற்படுத்திக் கொடுத்தோம். ஆனால் எல்லா இடங்களையும் அவர்கள் பெயருக்கு ஏற்படுத்திக் கொண்டனர். அதில் எங்களது கையொப்பம் இல்லை. இந்த விபரம் 1 1/2 ஆண்டுகள் கழித்து தான் எனக்கு தெரிய வந்தது. அதனால் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நகல் எடுத்து ஆவணங்களை பார்த்தோம். அப்போது தான் எங்களது கையொப்பங்கள் இல்லாமல் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது தெரியவந்தது. வேறு நபரை வைத்து அந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதும் தெரியவந்தது. தகவல் தெரிந்ததும் நான் எதிரியை சந்தித்து இதுபற்றி கேட்டேன். ஆனால் அவர் எவ்வாறு நடந்தது என்று தெரியாது என்றும், சரி செய்து தருகிறேன் என்றும் கூறினார். அதன் பின்பு தான் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தற்போது காண்பிக்கப்படும் இந்த புகார் தான் என்னால் கொடுக்கப்பட்டது. புகார் **அ.த.சா.ஆ.1.** என்னிடம் காண்பிக்கப்படும் 17/06/2008 தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரத்தின் முதல் மற்றும் இரண்டாம் பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதன் பின்பு உள்ள பக்கங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. முதல் இரண்டு கையொப்பங்கள் **அ.த.சா.2 மற்றும் அ.த.சா.3.** இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் என்னிடம் கையொப்பத்தை சரிபார்ப்பதற்காக மாதிரி கையொப்பங்கள் பெற்றனர். இது சம்மந்தமாக நீதிமன்றத்திலும் எனது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 164 வாக்குமூலம் **அ.த.சா.4.** இந்த வழக்கு சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

CWBR

**குறுக்கு விசாரணை** : எதிரி தரப்பில் இல்லை.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

JM.I PBLR